**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 26/2010 P.W. 4 /L.W.8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. ஜாண் பிரைமஸ்** | **Caste** | : | |
| **Father's Name** | : | த/பெ. ஜேசைய்யா | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 20.12.2023.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**1 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. 2, 3 வது குற்றம் சுமத்தபபட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கடல் தொழில் செய்து வருகிறேன். வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. 31.05.2009 ம் தேதி காலை 08.30 மணிஅளவில் போலீசார் பஸ் ஸ்டாண்ட் அருகே உள்ள பார்க் ஹோட்டல் அருகே நின்று சம்பவயிடத்தைப் பார்த்து படம் வரைந்துக்கொண்டிருந்தார்கள். இது குறித்து என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல்கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் அ.சா..2 ஆகும். என்னுடன் ஜஸ்டின் என்பவரும் கையொப்பம் செய்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** :

என் மீது இந்த நீதிமன்றத்தில் பல வழக்குகள் இல்லை. நான் குளச்சல் காவல்நிலையத்திற்கு அடிக்கடி சென்று வரும் நபர் என்றால் சரியல்ல. நான் கையெழுத்து செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்குத் தெரியாது. நான் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து கொடுத்துவிட்டு வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

குறுக்குவிசாரணை- முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.